# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1990 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க,
# தரைப்படை (திருத்தச்) சட்டம்

---

*[1990 ஒக்ரோபர் மாதம் 22 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*1990 ஒக்ரோபர் மாதம் 26 தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சகத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : சதம் 45* — *தபாற் செலவு : ரூபா 1.0*

## 1990 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, தரைப்படை (திருத்தச்) சட்டம்

[1990, ஒக்ரோபர் மாதம் 22 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச.வ.—ஓ 12/88 / 1938

### தரைப்படைச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:—

1. இச்சட்டம், 1990 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, தரைப்படை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தரைப்படைச் சட்டத்தின் 40 ஆம் பிரிவானது அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) (iii) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியினை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:— 357 ஆம் அத்தியாயத்தின் 40 ஆம் பிரிவினைத் திருத்துதல்.

"(iii) அந்த ஆள் ஆணைப்பத்திர அலுவலர் ஒருவர் அல்லாத தரைப்படை வீரர் ஒருவராக இருக்குமிடத்து, விடயத்தினை ஒன்றில் சுருக்கமுறையாகக் கையாளலாம், அல்லது தரைப்படையின் ஏவுநரிடம் அல்லது தரைப்படை ஏவுநரால் அதற்கென அதிகாரமளிக்கப்படக்கூடியவரான கேணலின் பதவி வரிசைக்குக் குறையாதவரான அத்தகைய அலுவலரிடம் சுருக்கமுறையாகக் கையாளப்படுவதற்கென விடயத்தினை ஆற்றுப்படுத்தலாம்.".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 42 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:— முதன்மைச் சட்டவாக்கத்தின் 42 ஆம் பிரிவினைத் திருத்துதல்.

(1) அதற்கான ஓரக்குறிப்பில் "ஆணைப்பத்திர அலுவலர் ஒருவராகவுள்ள" என்ற சொல்லமைப்புக்குப் பதிலாக, "தரைப்படை வீரர் ஒருவராகவுள்ள" என்ற சொல்லமைப்பினை இடுவதன்மூலமும்;

(2) "அல்லது ஆணைப்பத்திர அலுவலர் ஒருவராகவுள்ள" என்ற சொல்லமைப்புக்குப் பதிலாக, "தரைப்படை வீரர் ஒருவராகவுள்ள" என்ற சொல்லமைப்பினை இடுவதன் மூலமும்;

(3) "அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) (ii) என்னும் பந்தியில் குறிப்பிடப்பட்ட" என்ற சொல்லமைப்புக்குப் பதிலாக, "அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) (ii) அல்லது (iii) என்னும் பந்தியில் குறிப்பிடப்பட்ட" என்ற சொல்லமைப்பினை இடுவதன் மூலமும்; அத்துடன்

(4) "(iii) அவருடைய சம்பளத்திலிருந்து இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்டதான அத்தகைய கழிவு" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:—

"(iii) அவருடைய சம்பளத்திலிருந்து இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்டதான அத்தகைய கழிவு; அத்துடன்

(இ) குற்றஞ்சாட்டப்பட்டவர் பதவிநிலை சாசன் ஒருவராக இருக்குமிடத்து, பின்வரும் தண்டனைகள் எல்லாவற்றினையும் அல்லது அவற்றுள் எவற்றையேனும் அவருக்குக் கொடுக்கலாம்:—

(i) ஒரு கடுமையான கண்டித்தல் அல்லது கண்டித்தல்;

(ii) அவருடைய சம்பளத்திலிருந்து இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்டதான அத்தகைய கழிவு; அத்துடன்

(ஈ) குற்றஞ்சாட்டப்பட்டவர் சாசன் பதவி வரிசையில் அல்லது அதற்குக் குறைந்த ஒரு பதவி வரிசையில் இருக்குமிடத்து, பின்வரும் தண்டனைகள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எவற்றையேனும் அவருக்குக் கொடுக்கலாம்:—

(i) குற்றஞ்சாட்டப்பட்டவர் சாசன் ஒருவராக இருந்தால் கோப்ரல் பதவி வரிசைக்கும், குற்றஞ் சாட்டப்பட்டவர் ஒரு கோப்ரலாக இருந்தால் லான்ஸ் கோப்ரல் பதவி வரிசைக்கும், குற்றஞ் சாட்டப்பட்டவர் ஒரு லான்ஸ் கோப்ரலாக இருந்தால் பிறைவேட் பதவி வரிசைக்கும் மீளவும் அமர்த்துமாறு கட்டளை இடலாம்:

ஆயின், எவ்வாறிருப்பினும், 40 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) (iii) என்னும் பந்தியில் குறிப்பிடப்பட்ட அதிகாரியானவர் தரைப்படையின் ஏவுநராக இருந்து குற்றஞ்சாட்டப்பட்டவர் கோப்ரல் பதவி வரிசையில் அல்லது அதற்குக் குறைந்த பதவி வரிசையில் இருந்தால், நூற்றுப் பன்னிரண்டு நாட்களுக்கு அதிகமாகாத ஒரு காலப்பகுதிக்கு அவரைத் தடுப்புக் காவலில் வைக்குமாறு கட்டளையிடலாம் அல்லது அத்தகைய அதிகாரியானவர் கேணல் பதவி வரிசைக்குக் குறையாதவராக இருந்து குற்றஞ்சாட்டப்பட்டவர் கோப்ரல் பதவி வரிசையில் அல்லது அதற்குக் குறைவானதான பதவி வரிசையில் இருந்தால், தொண்ணூறு நாட்களுக்கு அதிகமாகாத ஏதேனும் காலப்பகுதிக்கு அவரைத் தடுப்புக் காவலில் வைக்குமாறு கட்டளையிடலாம்;

(ii) ஒரு கடுமையான கண்டித்தல் அல்லது கண்டித்தல்;

(iii) அவருடைய சம்பளத்திலிருந்து இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்டதான அத்தகைய கழிவு."

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.